### *Tuticorin Project*

* 571 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the estimate proposed by the Tuticorin Project Administrator for the project for the year 1966-67; and

(*b*) the actual allotment made by the Union Government thereon?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) ரூபாய் 575 லட்சம்.

(இ) இது தற்போதைக்கு ரூபாய் 193.60 லட்சம் என நிச்சயிக்கப்பட்டுள்ளது. கூடுதல் நிதி ஒதுக்குமாறு இந்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** துறைமுக வேலையை 1968-ல் பூர்த்தி செய்வது என்று அதன் ஆரம்பக் காலத்தில் திட்டம் இடப்பட்டது. இப்போது நாம் கோருகிற அளவிற்கு மத்திய அரசு கொடுக்காததின் காரணமாக அந்த இலக்கு தவறிவிடாதா ? அதை வற்புறுத்தி காலாகாலத்தில் திட்டப் பிரகாரம் இந்த வேலைகள் முடிவடைய ஏற்பாடு செய்யவேண்டாமா ? அதன் காரணமாக தொழில் வளர்ச்சி மற்றவைகளுக்கு எல்லாம் பாதகம் ஏற்படுகிறது என்று கூறி அதை மேலும் வற்புறுத்துவார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** மேலும் மேலும் வற்புறுத்த வேண்டுமென்றுதான், மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம்.

### நாட்குறிப்பேடுகள்

* 572 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் செய்தி, விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்காரிலிருந்து தயாரிக்கப்படும் நாட்குறிப்புகள் யாருக்கெல்லாம் வழங்கப்படுகின்றன ?

(இ) இந்த டைரிகள் எத்தனை வகைகளில் தயாரிக்கப்படுகின்றன ?

(உ) சம அந்தஸ்துள்ள வெவ்வேறு இலாகா அதிகாரிகளுக்கெல்லாம் ஒரே சீரான டைரிகள் வழங்கப்படுகின்றனவா?

(எ) வித்தியாசமிருப்பின் காரணமென்ன ?

(ஐ) இந்த டைரிகள் விற்பனை செய்யப்படுகின்றனவா ?

(ஒ) ஆம் எனில், சென்ற ஆண்டு, இந்த ஆண்டு விற்பனையான டைரிகள் எத்தனை, விற்பனைத் தொகை என்ன ?

(ஔ) மீதியிருக்கும் டைரிகள் என்ன செய்யப்படுகின்றன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) முதல் (ஔ) வரை; இக் கேள்விகளுக்கான பதில் உ சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

* 929-931-ம் பக்கங்களில் பன்னிரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.